## 29.11 கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்கப்படும் தொகுப்பூதியத்தினை உயர்த்துதல்

ஊரக வளர்ச்சி (இ5) துறை

அரசாணை (நிலை) எண்.60 நாள் : 03.05.2005

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.116, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 10.05.2000.
2. அரசாணை (நிலை) எண்.117, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 10.05.2000.
3. அரசாணை (நிலை) எண்.118, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 10.05.2000.
4. அரசாணை (நிலை) எண்.119, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 10.05.2000.
5. ஊரக வளர்ச்சி இயக்குநர் கடித எண்.ந.க51439/04/இ4 நாள் 24.07.2004
6. ஊரக வளர்ச்சி இயக்குநர் கடித எண் ந.க. 62425/04/இ4/ நாள் 7.3.2005
7. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிக்கை, நாள் 07.04.2005.

**ஆணை**

கிராம ஊராட்சிகளில் பணியாற்றி வரும் முழுநேர ஊராட்சி உதவியாளர்கள், பகுதிநேர எழுத்தர்கள், பகுதிநேர மேல்நிலை நீர்த்தோ்க்கத் தொட்டி இயக்குபவர்கள் மற்றும் பகுதிநேர துப்புரவுப் பணியாளர்கள் அகியோர்களுக்கு மேலே படிக்கப்பட்ட ஒன்று முதல் நான்கில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணைகளில் தொகுப்பூதியத்தை உயர்த்தி நிர்ணயித்து ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. ஊரக வளர்ச்சி இயக்குநர், படிக்கப்பட்ட ஐந்து மற்றும் ஆறில் காணும் கடிதங்களில், மேற்கண்ட பணியாளர்களுக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.200/– கூடுதலாக உயர்த்தி வழங்கவும், மேலும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்களால் கூடுதலாக இயக்கப்படும் ஒவ்வொரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கும் தற்போது வழங்கப்பட்டு வரும் ரூ.150/–ஐ ரூ250/–ஆக உயர்த்தி வழங்கவும் பரிந்துரை செய்துள்ளார்.

3. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 07.04.2003 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110ன் கீழ், கீழ்க்கண்டவாறு அறிவித்தார்கள்–

- ❖ ஊராட்சி முழுநேர எழுத்தர், பகுதிநேர எழுத்தர், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர், துப்புரவுப் பணியாளர் ஆகியோருக்கு வழங்கப்படும் தொகுப்பூதியம் இனி மாதம் ஒன்றுக்கு ரூ.200/– உயர்த்தி வழங்கப்படும்.
- ❖ அதாவது ஊராட்சி முழுநேர எழுத்தர்கள், தற்போது பெற்று வரும் 1800 ரூபாய் தொகுப்பூதியம், 2000 ரூபாயாக உயர்த்தப்படும்.
- ❖ ஊராட்சி பகுதிநேர எழுத்தர்கள், தற்போது பெற்று வரும் 800 ரூபாய் தொகுப்பூதியம், 1000 ரூபாயாக உயர்த்தப்படும்.
- ❖ ஊராட்சி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் தற்போது பெற்று வரும் 400 ரூபாய் தொகுப்பூதியம் 600 ரூபாயாக உயர்த்தப்படும். மேலும், கூடுதலாக இயக்கப்படும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒவ்வொன்றிற்கும் தற்போது 150 ரூபாய் கூடுதலாக வழங்கப்படுகிறது. இது 250 ரூபாயாக உயர்த்தப்படும்.
- ❖ ஊராட்சி துப்புரவுப் பணியாளர்கள், தற்போது பெற்று வரும் 400 ரூபாய் தொகுப்பூதியம், 600 ரூபாயாக உயர்த்தப்படும்.
- ❖ இந்த ஊதிய உயர்வு 01.04.2005 முதல் வழங்கப்படும்.

4. மேற்கண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகளின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

- ❖ ஊராட்சி முழுநேர எழுத்தர்களுக்கு மாதம் தலா ரூபாய் 200 கூடுதலாக உயர்த்தி, தற்போது வழங்கப்பட்டு வரும் ரூபாய் 1800லிருந்து ரூபாய் 2000 ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

- ஊராட்சி பகுதிநேர எழுத்தர்களுக்கு மாதம் தலா ரூபாய் 200 கூடுதலாக உயர்த்தி, தற்போது வழங்கப்பட்டு வரும் ரூபாய் 800லிருந்து ரூபாய் 1000 ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.
- ஊராட்சி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்களுக்கு மாதம் தலா ரூபாய் 200 கூடுதலாக உயர்த்தி தற்போது வழங்கப்பட்டு வரும் ரூபாய் 400லிருந்து ரூபாய் 600 ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. மேலும் கூடுதலாக இயக்கப்படும் ஒவ்வொரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கும் ரூ.100ஐ உயர்த்தி தற்போது வழங்கப்பட்டு வரும் ரூபாய் 150ஐ ரூபாய் 250 ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.
- ஊராட்சி துப்புரவுப் பணியாளர்களுக்கு மாதம் தலா ரூபாய் 200 கூடுதலாக உயர்த்தி, தற்போது வழங்கப்பட்டு வரும் ரூபாய் 400லிருந்து ரூபாய் 600 ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.
- மேற்கண்ட ஊதிய உயர்வு 01.04.2005 முதல் வழங்கப்படும்.

5. மேற்கண்ட ஆணைகளால் கிராம ஊராட்சிகளுக்கு ஏற்படும் கூடுதல் செலவினத்தை அந்தந்த கிராம ஊராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என ஆணையிடப்படுகிறது.

6. இந்த அரசாணையின் படிகளை அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் உடனே அனுப்புமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை நீங்கலாக) கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

7. இந்த அரசாணை 03.05.2005 நாளிட்ட நிதித்துறையின் அ.சா.எண். 71/DS(AV)/2005–1ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சாந்தா ஷீலா நாயர்**
அரசு செயலாளர்